DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | | |
|---|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.250/2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.4 |
| Name | :ஆசீர்வாதம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2023

-----

(எதிரிகள் 1, மற்றும் 3 முதல் 6 வரை ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் சட்டம் படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 14.04.2014ம் தேதி மாலை 4.30 மணிக்கு மூக்கன் தோட்டத்தில் குளிப்பதற்காக நானும், எனது அப்பா, எனது சித்தப்பா, எனது அண்ணன் பிரசாத் ஆகியோர்கள் சென்றோம். இடம் வாங்குவது சம்மந்தமாக முன் விரோதம் காரணமாக ஒச்சாத்தேவர் அவரது மகன் சரவணன், அவரது இளைய மகன் பிரபு, அவரது மனைவி பாப்பு, அவரது அண்ணன் நல்லதம்பி, நல்லதம்பியின் மனையி ஒச்சம்மாள் ஆகியோர்கள் அருவாள், கம்பி, கம்பு ஆகிய ஆயுதங்களை வைத்து சரவணன் எனது அப்பாவை

அருவாளால் இடது காலில் வெட்டியதில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஒச்சாத்தேவர் கம்பியால் எனது அப்பாவை தோள்பட்டையில் அடித்து வீக்க காயத்தை ஏற்படுத்தினார். அதை தடுத்த எனது சித்தப்பா ஸ்டீபனை அருவாளால் பிரபு என்பவர் இடது மணிக்கட்டில் வெட்டி எலும்பு முறிவு காயத்தை ஏற்படுத்தினார். நல்லதம்பி என்பவர் கம்பியால் எனது சித்தப்பாவை நெற்றியில் அடித்து இரத்தக் காயம் ஏற்பட்டது. ஏன் எனது அப்பாவை அடிக்கிறீர் என்று கேட்டதற்கு இத்தோடு செத்து தொலைந்து போங்கடா என்று கெட்ட வார்த்தையை கூறி சரவணன் அருவாளால் எனது தலையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். பின்பு ஒச்சாத்தேவர் என்னை கம்பியால் தாக்கி வலது கையில் எலும்பு முறிவு ஏற்படுத்தினார். ஏன் எனது அப்பா, சித்தப்பா, என் தம்பி ஆசீர்வாதம் ஆகியோர்களை அடிக்கிறீர் என்று கேட்ட எனது அண்ணன் பிரசாத்தை பிரபு அருவாளால் வெட்டியதில் தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. எனது அண்ணனை நல்லதம்பி கம்பியால் தாக்கியதில் இரத்தக் காயம் ஏற்பட்டது. பாப்பு மற்றும் ஒச்சம்மாள் அகிய இருவரும் கம்பால் எனது அண்ணனை மாறி மாறி அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். பின்பு அதன் வழியாக வந்த காரில் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு போலிசார் நடந்த சம்பவத்தை கேட்டு விட்டு எங்களை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல்

சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 20 நாட்கள் வரை உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையில் இருக்கும் போது போலிசார் என்னை விசாரித்தார்கள். காட்டப்படும் கம்பி சா.பொ.2 ஒச்சாத்தேவர் அடித்தது. காட்டப்படும் சா.பொ.1 அருவாளால் எதிரி சரவணன் என்னை வெட்ட பயன்படுத்தியது.

**குறுக்கு விசாரணை: இல்லை.**

/sd/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 14.07.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.